# கடலில் மீட்கப்பட்ட நாலு சிங்கள மீனவரை

## புலிகள் விடுவித்தனர்

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 11 இதழ் 13
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23-2-1995

(யாழ்ப்பாணம்]

வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் தத்தளித்த நிலையில் காப்பாற்றப்பட்ட 4 சிங்கள மீனவர்களை விடுதலைப் புலிகள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தனர்.

திருகோணமலை கடற்பரப் பிலிருந்து பாதை தவறி வடமராட்சி கடற்பரப்பில் தத்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக கடலில்

# இல. கடற்படை சூடு இந்தியமீனவர் பலி

(சென்னை)

தமிழகத்தில் நடுக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் சுட்டதில், ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்தார். பலர் படுகாயம் அடைந்தனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு

[4ம் பக்கம் பார்க்க]

## தொழிலாளர் பிரச்னையைத் தூண்டி

# நாட்டில் குழப்பம் விளைவிக்க

# எதிர்க்கட்சிகள் முயல்கின்றன

## - ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு -

[கொழும்பு]

நாட்டில் தொழிலாளர் போராட்டங்கள் ஓய்ந்து அமைதி திரும்பினாலும் எதிர்க்கட்சிகள் தொழிலாளர்களை தூண்டிவிட்டு நாட்டில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கக் கூடுமென ஜனாதிபதி சந்திரிகா எதிர்க்கட்சிகளை குற்றம் சாட்டியுள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் பன்னலை என்னுமிடத்தில் தொழிற்சாலை ஒன்றை திறந்து வைத்து பேசுகையிலேயே இவ்வாறு குற்றம் சாட்டினார்.

அண்மைக்காலமாக நாட்டின் தென்பகுதியில் தொழிலாளர் போராட்டம் அதிகரித்து வருவதால் வெளிநாட்டாளர்கள்தமது தொழிற்

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ கொழும்பில் நேற்று

# பத்திரிகையாளர் நடாத்திய பேரணி

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தேர்தல் கால வாக்குறுதிகளை மீறி, பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்துவது கண்டிக்கத்தக்கது என்று நேற்று நுகேகொடையில் நடைபெற்ற சதந்திரப் பத்திரிகையாளர் சங்க கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சை குழப்ப கிழக்கில் சதி முயற்சி - ரத்வத்தை கூறுகிறார்

(கொழும்பு)

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையை குழப்ப கிழக்கில் சதி நடப்பதாகவும் எனினும் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் நல்ல புரிந்துணர்வு இருப்பதாகவும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரதவத்தை நேற்று முன்தினம் தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாலாம் கட்ட சமாதானப் பேச்சுக்கள் இம்மாதம் இறுதிக்குள் அல்லது மார்ச் மாத முற்பகுதியில் நடைபெறும். 4ம் கட்ட பேச்சுக்களை ஆரம்பிப்பதில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ள போதிலும் சமாதானப் பேச்சுக்கள் எவ்வித தடையுமின்றி தொடர்ந்து நடைபெறுகிறது. வடபகுதி மக்களின் நாளாந்த தேவைகளை வழங்குவது, புலிகளுடன் கடிதங்களை பரிமாற்றம் செய்தல், வடக்கில் புனர்நிர்மான வேலைகளை ஆரம்பித்தல் என்பன எவ்வித இடையூறுமின்றி நடைபெறுகிறது.

பேச்சுவார்த்தைகள் சமாதான முயற்சிகளின் ஓர் அங்கமாகும் மக்கள் அச்சமின்றி பயமின்றி அமைதியாக வாழக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவதே எமது பிரதான நோக்கமாகும் எனவும் தெரிவித்தார். (சி)

# பிரபாவைப் பிடிக்க

## ஐ. நா. உதவியை நாடுக

### — சுப்பிரமணிய சுவாமி —

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை பிடிக்க ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இந்திய அரசு முயற்சிசெய்ய வேண்டுமென ஜனதா கட்சித் தலைவர் டாக்டர்சுப்பிரமணிய சுவாமி மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று

(2ம் பக்கம் பார்க்க)

# பூநகரி முகாம் மூடப்படாது

## முற்றான பொருளாதார தடை நீக்கமில்லை

### — அமைச்சர் ரத்வத்தை தெரிவிப்பு —

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் எந்தக் காரணததிற்காகவும் அகற்றப்படமாட்டாது. வடக்கே முற்றானபொருளாதாரத் தடை நீக்கமும் இல்லை.

இவ்வாறு பிரதிபாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை தெரிவிததாக 'த ஐலன்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது. அதுமேலும் கூறுகையில்,

அடுத்த கட்டப் பேச்சின் போது அரசியல்தீர்வு தொடர்பான அரசின் தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படும். இப்பேச்

(2ம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு நிதியில்

# அஷ்ரப் ஊழல்

(கொழும்பு)

அகதிகள் புனர்வாழ்வு நிதியின் ஒரு பகுதியில் புனர்நிர்மாண அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தனது சொந்த நலனுக்காக பயன்

(4-ம் பக்கம் பார்க்க)

# சிசிலுக்கு எதிராக

## பல குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

முன்னாள் இராணுவ தளபதி லெப்ரினன்ற் ஜெனரல் சிசில் வைத்தியரட்ண பதவியில் இருந்த காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் ஒழுங்கினங்கள் ஆகிய பாரதூரமான குற்றச் சாட்டுகள் குறித்து அவர் மீது விசாரணை நடைபெற்று வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிதிகள் மற்றும் பலகோடி ரூபா பெறுமதியான சட்ட விரோத கொடுக்

(4ம் பக்கம் பார்க்க)

# காமினி கொலை விசாரணை; 5 இந்திய நிபுணர்கள் வருகை

(கொழும்பு)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் திரு. காமினி திஸநாயக்கா கொலைசெய்யப்பட்ட சம்பவம் குறித்து நடக்கும் விசாரணையில் இலங்கை பொலிஸாருக்கு உதவுவதற்காக இந்தியாவிலிருந்து ஐந்து பேரடங்கிய நிபுணர் குழுவொன்று கடந்த திங்கட்கிழமை இலங்கை வந்துள்ளது.

இலங்கை அரசின் அழைப்பிற்கிணங்க இந்திய நிபுணர் குழு இங்குவந்துள்ளது. இக்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

12' 6' அளவுடைய காப்பற் (கம்பளம்) விற்பனைக்கு உண்டு தொடர்பு: செ. சேவியர் 12, சென் பற்றிக்ஸ் றோட். யாழ்ப்பாணம். சி-1403

### கருவாடு ஏற்றுமதி

[அரியாலை]

யாழ் மாவட்டத்தில் உள்ள கடல் பிராந்தியங்களில் பிடிக்கப்படும் மீன்களின் தேவைகளுக்கு அதிகமானவற்றை பதப்படுத்தி கருவாடு உற்பத்தி செய்து கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது. 59

### கால்நடை சுகாதார சேவை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கால்நடைச் சுகாதார நிலையத்துடன் இணைந்து கால்நடை வளர்ப்போருக்கு கால்நடைகளுக்கான சுகாதார சேவைகளைச் செய்து வருகின்றது.

சென்ற மாதம் வடமராட்சிப் பகுதியில் 52 மாடுகளுக்கும், 28 ஆடுகளுக்கும் செயற்கை முறைச் சினைப்படுத்தலும், இயற்கைமுறைச் சினைப்படுத்தல் முறை மூலம் 19 மாடுகளுக்கும், 18 ஆடுகளுக்கும் சேவை செய்வதோடு 120 மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்த்தடுப்பூசியும் 1200 கோழிகளுக்கு கொள்ளை நோய் தடுப்பூசியும் ஏற்பட்டது.

### பூநகரி முகாம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுக்களின்போது பாதைதிறப்பு புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை புலிகள் சமஷ்டித் தீர்வுத்திட்டத்தை பரிசீலிக்க தயாராகவுள்ளதாகவும் 'ஐலன்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது. (சி)

### பிரபாவைப் பிடிக்க

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சென்னையில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில், திரு. பிரபாகரனை இலங்கையிலிருந்து நாடுகடத்தி ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக தமிழ் நாட்டில் நடைபெறும் வழக்கு விசாரணையில்நிறுத்த இந்திய அரசு முயலவேண்டும். இதற்காக ஐ. நா.பாதுகாப்புச் சபையை இந்திய அரசு முடுக்கிவிட வேண்டும்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையானது 1992 ஏப்ரல் 9ல் லிபியா தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானத்தை மீள உயிர்ப்பூட்டி பிரபாகரனை பிடிக்க பலதரப்பு முயற்சிகளை மேற்கொள்ள அந்தச்சபையை கேட்கவேண்டும்.

இந்த நோக்கத்திற்காக அமெரிக்கா அரசிலும் மற்றும் சீன, இஸ்ரேல் அரசுகளிலும் பதவிகளில்உள்ள எமது நண்பர்களுடனும் தொடர்பு கொள்ளவுள்ளேன்.

கொழும்பிலிருந்து கடைசியாக வெளியான செய்தி அறிக்கைகளை சுட்டிக்காட்டி இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவை கொலைசெய்யும் முயற்சியில் புலிகள் ஈடுபட்டிருப்பதாக வந்திருக்கும் செய்தியை மேற்கோள்காட்டிய திரு. சுப்பிரமணிய சுவாமி புலிகள் தொடர்பாக தான் நீண்ட காலமாககொண்டிருக்கும் கருத்து தற்போது வேலும் வலுவூட்டப்பட்டிருப்பதாக கூறினார். புலிகள் தங்களது நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்களை அழித்து வருவதாகவும் மிக அண்மையிலே நடந்த சம்பவம் திரு. காமினி திஸாநாயக்கா கொழும்பிலே கொல்லப்பட்டதாகும் எனவும் கூறினார். ]சி[

# வட பகுதி புனரமைப்பிற்கு பிரிட்டன் உதவி வழங்கும்

[தகாழும்பு]

வடபகுதியை 81 கோடியே 60 லட்சம் அமெரிக்க டொலர் செலவில் புனரமைப்பதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதிக்கு உதவி வழங்க பிரிட்டன் விருப்பம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவை கொழும்பில் சந்தித்த பிரிட்டிஷ் வர்த்தக அமைச்சர் ரிச்சர்ட் மீடன் பிரிட்டிஷ் அரசின் விருப்பத்தை ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

வீதி புனரமைப்பு, மின்சார வசதி, தொலைபேசி வசதி மற்றும் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் போன்றவற்றை அமைத்தல் என்பன இந்தத் திட்டத்தில் பிரதானமாக சேர்க்கப்பட்டுள்ளன.

இதேவேளை வடபகுதியை புனரமைப்பதற்குத் தேவையான வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா செயலணிக் குழு ஒன்றையும் நியமித்துள்ளார்.

புனரவைப்பு வேலைகளுக்குத் தேவையான நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக வெளிநாட்டுத் தூதுவர்களையும் மற்றும் பிரதிநிதிகளையும் சந்தித்து இந்தக்குழு பேச்சுவார்த்தை நடத்தும். [இ சி)

### இலக்கத் தகடு விநியோகம்

(மானிப்பாய்)

யாழ். மாநகர சபையினர் 1995 ம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி இலக்கத் தகடுகளை யாழ். செயலகத்தில் வைத்து செயலக ஊழியர்களுக்கு கடந்த சில தினங்களாக விநியோகித்து வருகின்றனர். -71

## ஊழல் விசாரணை முடியும் வரை

# நாட்டை விட்டு வெளியேறுது சிசிலுக்கு தடை உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் இராணுவதளபதி சிசில் வைத்தியரத்னவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் முடிவடையும்வரை அவர் நாட்டைவிட்டு வெளியேறக் கூடாதென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கேற்ப அவரது பாஸ்போட்டும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது மேலும் இது குறித்து லஞ்சத் திணைக்களம் விமான நிலையத்திற்கும் அறிவித்துள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட ஜெனரல் சிசில் வைத்தியரட்ணவுக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன,

இதன்படி திரு வைத்தியரட்ண இராணுவத் தளபதியாகப் பதவிவகித்த காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் அரசாங்க நிதிமோசடி. தவறான கேள்விப்பத்திர கொடுக்கல் வாங்கல் என்பனபற்றி விசாரணை நடத்தப்படுகிறது. இ-சி


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடம்

இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து மாத்திரம் என்னால் 1995-03-17 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி:

பாதுகாப்புச் சேவகர் [தாழ்தரம்]

சம்பள அளவுத்திட்டம்:

ரூபா2455-8X40—2 775/- மாதமொன்றுக்கு. [இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் வழங்கப்படும்]

தகைமைகள்:

1. எட்டாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. விளையாட்டிலும், சமூக சேவையிலும் தீவிரமாகப் பங்குபற்றியிருத்தல் வேண்டும்.
3. உயரம்; 5 அடி 6 அங்குலங்களுக்குக் குறையாமல்இருத்தல் வேணடும்
   மார்பு: சாதாரண நிலையில் 32 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
4. வயது: விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

தெரிவு:

பொதுவுளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு:

1994-04-08 ஆம் தேதியப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தாபனச் சுற்றறிக்கைக் கடித இல. 27/1994க்கு அமைய, உணவு முத்திரை / ஜனசவியவிற்கு உரித்தான குடும்ப அங்கத்தவருக்கும் தீவிரவாதச்செயல்களினால் பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவருக்கும் அவற்றை உறுதிப்படுத்துமிடத்து மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது நிதிக்கிளையில் ரூபா 20/- ஐச் செலுத்தி மேற்படி பதவிக்கான விண்ணப்பப படிவங்களை இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/- க்கான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் 23X10 ச,மீ அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 1/-முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையிலிருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

— பதிவாளர்

யாழ்.பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.
1995-02-15.

[எ 4794[


மோதல் தவிர்ப்பு உடன்பாடு

# "சமாதானம் ஏற்படுத்த சாதகமான சூழ்நிலை"

(கொழும்பு)

மோதல் தவிர்ப்பு உடன்பாடு காரணமாக அமைதியையும், சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கு சாதகமான சூழ்நிலையேற்பட்டிருக்கிறது என்று யாழ். வந்து திரும்பிய சமாதானக் குழுவைச்சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு வை.பி.டி.சில்வா கொழும்பில் தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் அது நிறுத்த படமாட்டாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எந்த விதத்திலேனும் சமாதானத்தை நிலை நாட்டுவது அல்ல நியாயமான ரீதியிலே சமாதானம் நிலை நாட்டப்பட வேண்டும் என்றும் புலிகளைத் தண்டிக்கவேண்டும் என்ற மனோபாவம் மாறவேண்டும் என்றும் இதன் மூலம் நாட்டில் ஐக்கியமும் அமைதியும் ஏற்படும் என்றும் யாழ். வந்து திரும்பிய சமாதானத்தூதுக் குழுவினர் கொழும்பில் தெரிவித்துள்ளனர். சி-ரி


உ

சிவமயம்

நந்தாவில்

அருள்மிகு ஸ்ரீ முன்னனீஸ்வரர் ஆலய

# மஹாநியாச இலக்ஷார்ச்சனை

சிவநேயச் செல்வர்காள்!

வட-இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கோண்டாவில், கொக்குவில, தாவடி ஆகிய இடங்களுக்கு மத்தியஸ்தானமாக நந்தாவிலில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முன்னனீஸ்வர சுவாமிக்கு நிகழும்பவ வருடம் மாசி மாதம் 12-ம் நாள் (24-02 95) வெள்ளிக்கிழமை வரும் மூல நட்சத்திரத்தில் மஹா நியாச இலக்ஷார்ச்சனையும், விசேஷ அபிஷேக ஆராதனைகளும், 29 நாட்கள் வரை நடைபெறும். பங்குனி 10-ம் நாள் (24-03-95) வெள்ளிக்கிழமை இலக்ஷார்ச்சனை பூர்த்தியும், நவோத்தர சங்காபிஷேகமும் நடைபெறும். மேற்படி குறித்த இவ்விருபததொன்பது நாட்களில் தங்கள் நட்சத்திரங்களை ஸ்ரீ முன்னனீஸ்வர சுவாமிக்கு ஷகஸ்ர நாம அர்ச்சனைகளும் செய்வித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொளகின்றோம்.

குறிப்பு:— ஒவ்வொரு நாளும் மாலை 4 மணிக்கு விஷேச அபிஷேகமும், 5 மணிக்கு தீபாராதனைகளு , 6 மணிக்கு இலக்ஷார்ச்சனையும் நடைபெறும்.

இங்ஙனம்

பிரதமகுரு ச. சிறீஸ்கந்தராஜக் குருக்களும்,

உரிமையாளரும், உபயகாரர்களும்

ஸ்ரீ முன்னனீஸ்வரர் தேவஸ்தானம்.

நந்தாவில், கோண்டாவில்,

(ஏ-4793)

யாழ்ப்பாணம் நல்லூர் [illegible]

### மணிவாக்கு

மாறுமல் அழியாமல் எப்பொழுதும் ஒரேநிலையில் வரக்கூடிய இன்பம் எதுவோ அதுதான் உண்மையான இன்பம், இதைத்தான் பேரின்பம் என்பார்கள்.

ஜகத்குரு ஸ்ரீ ஜயந்திர சுவாமிகள்

## நமது நோக்கு

### அடுத்த கட்டம்

அடுத்த கட்டப் பேச்சுகள் விரைவில் நடைபெற உள்ளதாகச் செய்திகள் வருகின்றன.

ஏற்கனவே நடந்த பேச்சுக்களின்போது எடுத்த முடிவுகள் பூரணமாக அமுலாக்கப் படவில்லை எனக் குற்றச்சாட்டுகள் வந்தன.

தடைகளும், தாமதங்களும் பேச்சு வார்த்தைகளைக் குழப்பி விடுமோ என மக்கள் எண்ணினுர்கள்.

எனினும் சிக்கல்களை நீக்கி அடுத்த கட்டப் பேச்சைத் தொடர வாய்ப்புகள் வளர்ந்து வருகின்றன புரிந்துணர்வின் அடிப்படையில் சிக்கலை அணுக முயற்சிகள் நடப்பதாகவும் செய்திகள் வருகின்றன.

தடைகள், தாமதங்கள் ஏன் எப்படி எவரால் ஏற்படுகின்றன என்பதை அரசு புரிந்து கொண்டிருக்கும்.

இங்கு வந்து போவோர் இங்குள்ள நிலைமைகளை நேரிற்கண்டு தெற்கிலே விளக்கி வருவதும் தெளிவை ஏற்படுத்துமென நம்புகிறேம்.

ஆர்ப்பாட்டப் பேரணிகள் மூலம்மக்களின் உணர்வுகள் வெளிப்படுத்திய பின் அந்த உணர்வுகளை உணர்ந்து அரசு செயற்படவேண்டும்.

மேலும் தாமதங்கள் தடைகள் ஏற்பட்டால் விபரீத விளைவுகளை ஏற்படும் என்பதையும் அரசு புரிந்திருக்கும்.

இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த புனர்வாழ்வு நடவடிக்கைகள் எவ்வளவு அவசியம் என்பதை இங்கு மாத்திரமல்ல சர்வதேச அரசியல் ஆய்வாளர்களே உணர்ந்துள்ளார்கள்.

எனவேதான் புனர்வாழ்வுப் பணிகளைத் துரிதப்படுத்த அரசு அதிகாரிகள் குழு இங்கு வந்து பணிகளை ஆரம்பிக்க உள்ளது.

மேற்கு நாடுகளின் தூதுவராலயத்தைச் சேர்ந்தவர்களின் தூதுக்குழு ஒன்றும் விரைவில் இங்குவர உள்ளது.

புனர்வாழ்வுக்கு உதவிகளை எவ்வாறு செய்யலாம் என்பது பற்றியும் அவர்கள் ஆராய உள்ளனர்.

மின் விநியோகத்தைச் சீராக்கப் பிரிட்டன் தயாராக உள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இத்தகைய பின்னணியில் அரசின் செயற்பாடுகள் அடுத்தகட்டப் பேச்சினைத் துரிதமாக்கி நியாய பூர்வமான தீர்வினைக் காண உதவவேண்டும்.

# தெற்கில் ஜே. வி. பி. வளர்ச்சி வேகம் பெற்று வருகிறது!

## - பொலிஸ் நிலையங்கள் உஷார் நிலையில்

(கொழும்பு)

தெற்கில் மீண்டும் ஜே. வி. பி. வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தெற்கில் தற்போது நடைபெற்று வரும் வேலைநிறுத்தப் போராட்டங்களின் பின்னணியில் ஜே. வி. பி. செயற்பட்டு வருவதாக சந்தேகங்கள் எழுந்துள்ளன.

தேசியபுலனுய்வுத்துறை இது குறித்து விழிப்பாக ஆராய்ந்து வருவதாகவும் தெற்கில் ஜே. வி. பியினரின் நடவடிக்கை குறித்து கண்காணிக்குமாறு ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களும் மிகுந்த உசார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர் பிரச்னைகள் உடனடியாக தீர்த்து வைக்கப்படாவிடில் தெற்கில் விரும்பத்தகாக சக்திகள் குழம்ப நிலையை தோற்றுவிக்கும் அபாயம்எழலாம் எனசிரேஷ்ட அமைச்சர்கள் எச்சரித்துள்ளனர்.

தற்போதைய நிலையில் இவாறனதொரு அச்சுறுத்தல் எழுமாஞல் அதனை கட்டுப்படுத்த வடக்கு-கிழக்கிலிருந்து படையினரை தெற்கே கொண்டுவரமுடியாத நிலையில் அரசு தற்போது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தெற்கில் ஜே.வி.பியினர் தொடர்ந்தும் சுவரொட்டிப்போராட்டத்தை நடத்தி வருவதுபற்றி பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்த கருத்துதெரிவிக்கையில்; ஜே. வி. பியால் எந்தவித பயமுறுத்தலும் இல்லை. ஜே. வி.பி; தற்போது ஒரு அரசியல் கட்சியாக இருப்பதால் அவர்களுக்கு பிரசாரம் செய்யும் உரிமை இருப்பதாகவும் கூறினுர். -சி

# மோதல் தவிர்ப்பை குழப்ப புளொட் தீவிர முயற்சி

## — வவுனியாவில் பெரும் அட்டகாசம் —

(கொழும்பு)

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்குமிடையிலான மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை புளொட் இயக்கத்தின் செயற்பாடுகள் குழப்பிவிடலாமென 'சணடே லீடர்' பத்திரிகையின் இராணுவ செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதுபறறி அவர் மேலும் தெரிவிக்கையில்; வவுனியாவில் புளொட் அமைப்பு கொலை. கொள்ளை, ஆட்கடத்தல், வீடுடைப்பு போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது இதனுல் வவுனியாவில் பதற்ற நிலை காணப்படுகிறது.

அண்மையில் தமிழ் பொது மகன்ஒருவரை தாக்கசென்ற புளொட் உறுப்பினர்ளில் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் இது பற்றி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து பொலிஸ் கோஷ்டி ஒன்று புளொட் அலுவலகத்தை சுற்றிவளைத்து அவர்களை எச்சரிக்கை செய்யும் விதத்தில் வானைநோக்கி சுட்டு அங்கிருந்த ஏழுபேரை கைதுசெய்துள்ளது. தற்போது இவர்கள் பல குற்றச்சாட்டுகளுக்காக தீவிரவிசாரணைக் குட்படுத்தப் பட்டுள்ளனர்.

இவர்களால் பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்கள் தாங்கள் ஏனைய புளொட் உறுப்பினர்களால் கொலைசெய்யப்படலாம் என்ற அச்சத்தால் வவுனியா பொலிஸ் நிலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதையடுத்து புளொட் இயக்கத்தினருக்கு எதிராக பொலிஸார் கடும்நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## அமைச்சர் ரத்வத்தை காலத்தில்

# சிறந்த போரிடும் படையாக இராணுவம் மாற்றப்படும்!

(கொழும்பு)

இலங்கை இராணுவம் சிறந்ததொரு போரிடும இராணுவமாக மாற்றப்படுவதற்கு பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை முக்கிய பங்கு வகிப்பார் என இராணுவ வட்டாரங்கள் கருதுகின்றன.

கடந்த காலத்தில் இராணுவம் படை பலத்தில் வளர்ச்சி கண்டபோதும் கெரில்லாப் போராட்டத்தை முறியடிக்கும் வகையில் வளர்ச்சியடையவில்லை. இந்த நிலையில் இலங்கைப் படையை அந்த நிலைக்கு மாற்ற கேணல் ரத்வத்தையின் பதவிக்காலம் சிறந்ததாக அமையுமெனப் படையினர் கருதுகின்றனர்.

முன்னுள் படை அதிகாரியான கேணல் ரத்வத்தை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படுகையில் ஏன் ஒரு சிவில் அதிகாரியை பாதுகாப்பு அமைச்சின் செயராக அரசு நியமித்தது என்பது படையினர் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

இராணுவத்தினரின் சிறந்த ஆலோசனைகள் வழங்கப்படுமாயின் பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலர் திரு. சந்திரானந்த டீ சில்வாவும் திறம்பட செயற்படுவார் என அரசு வட்டாரங்கள் கருதுகின்றன. எப்படியாவது முப்படையினரைரும் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவர வேண்டும்என்ற நோக்கிலேயே ஜனாதிபதி சந்திரிகா, திரு. சந்திரானந்த டி சில்வாவை இப்பதவிக்கு நியமித்துள்ளாராம். -சி

## பலதும் பத்தும்

### உடற்பருமன்!

இடுப்பளவு கூட ஆயுள் குறையும் (increased waist line decreases the life line) என்பது உடல்நலமொழி. கூடியளவு கொழுபபு உடலுறுப்புகளின் வேலைப் பளுவை அதிகரிக்கும்.

அதனுல் மாரடைப்பு, நீரிழிவு, பித்த நீர்ப்பைக் கற்கள், ஹேர்னியா, எலும்பு மூட்டுகள் பாதிப்பு இப்படிப் பல தீமைகள் அத்தோடு; தொற்றி அசைந்து வருகிறது!'' எனச்சேதி!

உப்பு எடையை அதிகரிக்க உதவுகிறது. ஐஸ்கிறீம், உலர்ந்த பழங்கள், கேக், மதுபானம் எண்ணை வகை வாயூறுகிறதா?வேண்டாமே எடை குறைக்க மருந்துகள் உண்டு. ஆனுல் மருந்துகளைத் தவிர்க்க விருந்துகளை விடவேண்டியது தான்! வீட்டுத் தோட்ட வேலை! உடற்பருமனைக் குறைக்கும் பணப் புழக்கம் கூட்டும்!

— மயூரன்

# தனியார் மயமாக்கலுக்கு சிறிமா கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

சந்திரிகா அரசின். தனியார் மயமாக்கல் கொள்கையை பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடுமையாக சாடியுள்ளார்.

இதுபற்றிஅவர் அண்மையில் சுாப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் பேசுகையில்;

முன்னைய எனது அரசாங்கம் உலகவங்கியின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடக்கவில்லை. தனியார் நிறுவனங்கள் பல தேசியமயமாக்கப்பட்டதற்கு உலகவங்கி எதிர்ப்பு தெரிவித்திருந்தபோதும் அவை தேசியமயமாக்கப்பட்ட பின் நல்ல நிலையில் இயங்கிவந்தன.

இன்று உலவங்கியின் அறிவுறுத்தல்களுக்கிணங்க அரச நிறுவனங்கள் பல தனியார் மயமாக்கப்பட்டு வருகின்றன. பிரதி நிதியமைச்சர் திரு. பீரிஸின் தனியார்மயமாக்கல் தொடர்பான அறிவிப்பு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனுல் நான்தனியார் மயமாக்கலுக்கு எதிராகவே உள்ளேன்.

இன்று தனியார்மயமாக்கலுக்கு எதிராக பெரும்போராட்டம் வெடித்துள்ளது, இது பற்றி பலரும் என்னிடம் நேரடியாகவே முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர் எனவும் தெரிவித்தார், -சி

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் இன்று 23ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு அதிபர் து. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமியும், சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசாவும் கலந்து கொள்வார்கள். நிறுவுநர் உரையை ஆத்மஜோதி நா. முத்தையா நிகழ்த்துவார்.

## இராசி பலன்

23-02-1995

வியாழக்கிழமை

(தமிழுக்கு மாசி -11)

நவமி பி. இ. 3-32 வரை, அனுஷம் காலை 6-45 வரை, சுபவேளை காலை 8-01 முதல் 9-31 வரை.

மேஷம்: வீண் வம்பு, கீழோர் துன்பம், மயக்கம்.

இடபம்: துணிவான செயல், காரியசித்தி, பயணம்.

மிதுனம்: அதிகாரிகள் பாராட்டு, புதிய செய்தி, பணவரவு.

கடகம்: ஏழ்மைநிலை, மனப் பயம், அலைச்சல்.

சிங்கம்: வயோதிபர் வன்மம், அமைதிக் குறைவு, கடன்படல்

கன்னி: வேண்டாத உறவு, தொழில் மேன்மை, தியானம்.

துலாம்: உறவினர் சங்கடம், பேச்சுவார்த்தை, மனச்சுமை.

விருச்சிகம்: நண்பர் சகவாசம், விருந்துபசாரம். உல்லாசம்.

தனுசு: வழித் தொல்லை, தொழில்கஷ்டம், மரியாதைக் குறைவு

மகரம்: சகோதர அறிவுரை, கல்வியில் சிறப்பு. புகழ்.

கும்பம்: கவித்திறன், குடும்பசுகம், சுபகாரியம்.

மீனம்: போராட்ட நிலை, பணியாள் சீற்றம், மனக் கவலை.

— ஜோதியர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02-23

வியாழன் இரவு

08-01 சொல்லுங்கள் பார்க்கலாம்
08-10 சித்த மருத்துவக் குறிப்புகள்
08-20 உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் ''புத்துயிர் பெறுகிறது'' குறுநாடகம்
08-30 செய்திகள்
08-40 மொழியும் வாழ்வும்
08-50 தாயகப் பாடல்கள்

1995-02-24

வெள்ளி காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 மணியாரம்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-02-23

வியாழன் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 இசையும் கதையும் — அ. வினிற்ரு எழுதிய ''மன உறுதி''
06-00 சிந்தனைக்கு சில விஞடிகள்
06-02 பொன் விளையும் பூமி
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 கேள்வி பதில் - விளையாட்டுத் தொடர்பானவை
06-25 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

வளங்கள் வாழும் காட்டிலே
குளிர்மை என்றும் வாழ்ந்திடுமே

# பிரிட்டனின் உதவித்திட்டத்தில் இலங்கைக்கு முன்னுரிமை

## பிரிட்டிஷ் அமைச்சர் கூறுகிறுர்

(கொழும்பு)

பிரிட்டனிலிருந்து மிகப் பெரும் வர்த்தகத்தூதுக்குழுவுக்குதலைமைதாங்கி இலங்கை வந்துள்ள அமைச்சர் றீட் ஹாம் லண்டனில் உதவி வழங்கும் நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

ஆசியாவில் அபிவிருத்தி அடைந்துவரும்கைத்தொழில் நாடுகளில் இலங்கையும் ஒன்றெனவும் பிரிட்டிஷ் அமைச்சர் செய்தியாளர் மத்தியில் பேசிய போது கூறியுள்ளார்.

இலங்கையில் 6 கோடி டொலர் செலவில் 7 சிறிய நீர்மின்சார உற்பத்தி ஆலைகளை அமைப்பதற்கு மின் உற்பத்தி அமைச்சர் கேணல் ரத்வத்தையுடன் உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திட்ட பின்னர் அமைச்சர் செய்தியாளர் மத்தியில் உரையாற்றினுர்.

இலங்கை அரசாங்கம் தற்போது மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து பிரிட்டிஷ் அரசாங்கம் மகிழ்ச்சி அடைந்திருக்கிறது என்றும் திரு. றீட் ஹாம் தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நடத்தவுள்ள 4-வது சுற்று பேச்சுவார்த்தைகளை அடுத்து நாட்டில் கூடுதலான அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கே-சி

# ஜனுதிபதி செயலகத்தை படம் பிடித்த சிங்களபெண் கைது

(கொழும்பு)

ஜனுதிபதி செயலகத்தைப் படம்பிடித்த சிங்களப் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலிமுகத்திடலுக்கு எதிராகவுள்ள ஜனுதிபதி செயலகமான பழையநாடாளுமன்றை நேற்று முன்தினம் மாலை 4-30 மணியளவில் புகைப்படம் பிடித்துக்கொண்டிருந்த குருநாகலைச் சேர்ந்த சிங்களப் பெண்ணையும் அவரது கணவரையும் பொலிஸார் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

விசாரணையின்போது மேற்படி சிங்களப் பெண்ணின் கணவர் ஒரு தமிழர் எனத் தெரிய வந்ததையடுத்து விசாரணை மேலும் முடுக்கிவிடப்பட்டுள்ளதாம். (சி)

# எயர்லங்கா விமான நிறுவனம் வங்குரோத்து நிலை அடையும்

## தனி நபர் ஆணைக்குழு அறிக்கை

(கொழும்பு)

எயர்லங்காவினுல் முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் கொள்முதல் செய்யப்பட்ட எயர்பஸ் விமானங்களின் மூலமாக, விரைவில் எயர்லங்கா நிறுவனம் வங்குரோத்து நிலையை அடையலாம் என்று இந்த எயர்பஸ் கொள்வனவில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் பற்றி விசாரணை செய்யும் நீதியரசர் செனிவரத்னவின் தனிநபர் ஆணைக்குழு தனது ஆரம்ப அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; ஒப்பந்தத்தின்படி மூன்று எயர்பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்யவேண்டி இருந்தது. அவற்றில் இரண்டு ஏற்கனவே இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன. இந்தக் கொடுக்கல் வாங்கல் காரணமாக, இலங்கைக்குப் பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நிபந்தனைகளின்படி, அரசாங்கம் அதை ரத்துச் செய்யமுடியாது. இந்தக் கொடுக்கல் வாங்கல் காரணமாக, எயர்லங்கா நிறுவனம் வங்குரோத்து நிலையை அடையவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணையின் அறிக்கையை நீதியரசர் ஓ.எல்.எம். செனிவரத்ன, அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கவிடம் நேற்றுக் கையளித்தார். ம-சி

# இந்தியா வருமாறு ராவ் அழைப்பு

## பெனுஸிர் நிராகரிப்பு

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுக்கு வருகை தருமாறு பாகிஸ்தான் பிரதமர் பெனுசிர் பூட்டோவுக்கு இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் விடுத்த அழைப்பை, பெனுசிர் பூட்டோ நிராகரித்துள்ளார்.

'சார்க்' எனப்படும் தெற்காசியநாடுகளின் கூட்டமைப்பு மாநாடு, புதுடில்லியில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் பெனுசிர் பூட்டோ கலந்து கொள்ளவேண்டும் என்ற நிலையில் இந்தியா வருவதைத் தவிர்க்கும் வகையில் பெனுசிர் பூட்டோ இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்கு பாகிஸ்தான் ஜனுதிபதி மெகாரியை அனுப்பவுள்ளார்

மேலும் கோபன்ஹேகனில் நடைபெறவுள்ள சமூக வளர்ச்சி குறித்த உலக மாநாட்டுக்கு திரு. நரசிம்மராவ் செல்லவிருப்பதால், பெனுசிர் பூட்டோ அந்த மாநாட்டில் கலந்துகொள்ள மாட்டார் என்றும் பாகிஸ்தான் தரப்பில் கூறப்படுகிறது.

இதேவேளை எப்ரல் மாதம் அமெரிக்கா செல்லவுள்ள பெனுசிர் பூட்டோ, காஷ்மீர் பிரச்னையில் இந்தியாவுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்ள இருப்பதாகவும் கூறப்படுகிறது. கே-சி

# பாடசாலைகளிலும் அடையாளஅட்டை பணியகம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர் மாணவிகள் இலகுவாக தங்களது அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்காக, பாடசாலை மட்டத்தில் அடையாள அட்டைப் பணியகங்கள்நிறுவப்பட இருக்கின்றன.

பரீட்சைகள் நெருங்கிய நேரத்தில் அடையாளஅட்டைகளை பெற்றுக் கொள்ள முடியாத மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை தவிர்ப்பது, இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பு பாரன் ஜயதிலக வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ம-சி

# யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. எம்.பி.க்கள் மூவர் ராஜினுமா செய்வர்?

(கொழும்பு)

தமது பதவிகளை ராஜினுமா செய்யுமாறு யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. எம. பி.க்கள் மூவர், அந்தக்கட்சியின் தலைமைப்பீடத்தினுல் கேட்கப்படவுள்ளனராம்.

இதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படாதபோதிலும், கட்சித் தலைமைப்பீடத்திற்கும், மேற்படி மூவருக்கும் இடையிலான சில பிரச்னைகளே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

யாழ். மாவட்டத்திலிருந்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்பது ஈ. பி டி. பி. உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டது தெரிந்ததே. -சி

# அடுத்த நாலு வாரத்தில் 8,000 தமிழ் அகதிகளை இந்தியா அனுப்பும்

(சென்னை)

இந்தியாவிலிருந்து 8,000 இலங்கைத் தமிழ் அகதிகள் அடுத்த நான்கு வாரத்திற்குள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 27ம் திகதி முதல் அடுத்த மாதம் 19ம் திகதிக்குள் 4,000 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னுருக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் மற்றைய தொகுதி 4,000 பேரும் அடுத்த மாதம் 7ம் திகதி முதல் 17ம் திகதிக்குள் சென்னையில் இருந்து திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

தற்போது இந்தியாவில் ஒரு லட்சம் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருப்பதாக அதிகாரப்பூர்வமான செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது. க-சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-

### தமிழக கடலில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடுக்கடலில் இந்திய மீனவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது அப்பகுதிக்குத் திடீரென வந்த இலங்கைக் கடற்படையினர், மீனவர்கள் மீது சரமாரியாகச் சுட்டதாலேயே தமிழ்நாடு ஜெகதாபட்டினத்தைச் சேர்ந்த சாமிக்கண்ணு என்ற மீனவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்திற்குத் தமிழக முதல்வர் ஜெயலலிதா பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார். -சி

### தொழிலாளர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகளை மூடி தமது முதலீடுகளை இங்கிருந்து வேறு நாடுகளுக்கு நகர்த்தப்போவதாகவும் அவை கூறியுள்ளதாகவும் இந்தப் போராட்டங்களை கட்டுப்படுத்தி வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அரசு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டுமென அவர்கள் கேட்டிருப்பதாகவும் ஜனுதிபதி சந்திரிகா கவலை தெரிவித்துள்ளார்.

பொ. ச. மு அரசு பதவி ஏற்றது முதல் தொடர்ந்து நாட்டில் அரச தனியார் ஊழியர்கள் நாடு தழுவிய ரீதியில் பெரும் ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் நடாத்தி வருவதும் தெரிந்ததே. -சி

### காமினி கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினர் வெடிகுண்டு வெடித்த இடத்தை பார்வையிட்டதுடன் இச்சம்பவம் குறித்து இலங்கை பொலிஸாருடனும் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடாத்தியுள்ளனர்.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் 23ம்திகதி இடம்பெற்ற இந்த மனித வெடி குண்டுத் தாக்குதல் குறித்து இலங்கைப் பொலிஸார் ஸ்கொட்லன்ட் யாட் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை நடாத்தி வருகின்றபோதும் இதுவரை இக்கொலைச் சம்பவம் குறித்து பொலிஸாரால் கொலையாளிகளை இனங்காணமுடியவில்லையாம்.

இந்நிலையில் இலங்கை வந்து ஆரம்ப ஆய்வுகளை நடாத்திய இந்தியநிபுணர்கள்குழு நேற்று இந்தியா திரும்பவிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கடலில் மீட்கப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தளித்த இந்த மீனவரை காப்பாற்றிய மக்கள் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

இவர்களை நன்கு பராமரித்து புலிகள் நேற்றுக்காலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தனர்.

காலி, அம்பாந்தோட்டை முதலிய பகுதிகளைச் சேர்ந்த, கே. டி. வீரசிங்க, எல்.வை. நேசன், இ. கே. ஜெயசுந்தர, ரட்ணவீர ஆகிய 4 மீனவர்களே புலிகளால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களாவர். (கே-சி)

### புனர்வாழ்வு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துவதாக குற்றம் சாட்டப்பட்டிருப்பதாக 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் நகரப்பகுதியில் அமைச்சர் அஷ்ரப் சுமார்20 லட்சம்ரூபா செலவில் தனக்கென விடுதியொன்றை திருத்துவதற்காகவும் இதற்கு அகதிகள் புனர்வாழ்விற்கான நிதி பயன்படுத்தப்படுவதாகவும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

இச்செய்தி பொ. ச. மு. அமைச்சரவைக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்துமென கூறப்படுகிறது. -சி

### கொழும்பில் நேற்று

(1-ம பக்கத் தொடர்ச்சி)

அக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கொழும்பில் இருந்து வெளிவரும் தேசியப் பத்திரிகை அலுவலகங்களில் இரகசியப் பொலிஸார் உட்புகுந்து சோதனை நடத்துகின்றனர். சில பத்திரிகை ஆசிரியர்களை நாலாவது மாடிக்கு விசாரணைக்கு வருமாறு சி. ஐ. டி. பொலிசார் அழைப்பு விடுக்கின்றனர். இச்சம்பவங்கள் தேர்தல் காலங்களில் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம், பத்திரிகையாளர்களுக்கு அறிவித்த பத்திரிகை சுதந்திர வாக்குறுதிக்கு எதிரானவை ஆகும்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன், பத்திரிகையாளர்களும், செய்தியாளர்களும் மாபெரும் பேரணி ஒன்றை நடாத்தினுர்கள். ம-சி

### சிசிலுககு

(1ம் பககத் தொடர்ச்சி)

கல் வாங்கல் தொடர்பாக இந்த மோசடிகள் இடம் பெற்றுள்ளன என்ற குற்றச்சாட்டின் பேரில் சி.ஐ.டி. பொலிசார் விசாரணைகளை நடத்தி வருகின்றுர்கள்.

7 கோடி 20 லட்சம் ரூபா வெளிநாட்டு நாணய மாற்று செலவினத்தில் அதி சக்தி வாய்ந்த திசையறி கருவி கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பாக 2 கோடி 40 லட்சம் ரூபா கையாடப்பட்டமை தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெறுகின்றன.

சட்டவிரோத வானெலி ஒலிபரப்பை கண்டுபிடிப்பதற்கான இந்த சக்திவாய்ந்த. நிலத்திலும், ஆகாயத்திலும் பயன்படுத்தக்கூடிய உபகரணம் பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. இந்த உபகரணம் செயற்படாமற் போனமையினுல் அந்த நிறுவனம் மாற்று உபகரணம் ஒன்றை வழங்கி இருந்தது.

இந்த நவீன உபகரணம் கொள்வனவு செய்யப்பட்ட போது வழமையான கேள்விப்பத்திர முறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை என குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மேலும் மலேசிய விநியோகத்தரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட தரம் குறைந்த உணவு விநியோக பொதிகள் பின்னர் பழுதடைந்து விட்டன என்றும் பாவனைக்கு உகந்தவையாக இருக்கவில்லை யென்றும் அதில் பொதி செய்யப்பட்ட உணவை உட்கொண்ட பலர் சுகவீனம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்தும் விசாரணை நடைபெறுகிறது.

இராணுவத்தில் கம்பியூட்டர் மய திட்டத்திற்கான செயலாற்று அறிக்கையின்படி இராணுவ பயிற்சி முனையில் இருந்து வழங்கப்பட்ட 5 லட்சம் ரூபா பணம் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. இந்த கம்பியூட்டர் மய திட்டம் பொருத்தமற்றதென்று தெரிவிக்கப்படுகிறது.

(மற்றொரு செய்தி 2-ம் பக்கத்தில்) (கே சி)